பக்கங்கள்:-18

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 29 | வெள்ளிக்கிழமை | 12.07.2024 | அதிர்வு 346

## இந்திய மீனவர்கள் 13 பேர் நெடுந்தீவுக் கடலில் கைது!

**25ஆம் திகதி வரை மறியல்**

(ந.லோகதயாளன்)

மூன்று படகுகளில் இலங்கைக் கடற் பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 13 இந்திய மீனவர்கள்,

06



# பிரதமர் இன்று யாழ். விஜயம்!

## பல்வேறு நிகழ்வுகளிலும் பங்கேற்பார் கிளிநொச்சிக்கும் பிற்பகல் செல்வார்

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

பிரதமர் தினேஷ் குணவர்தன, யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு இன்று விஜயம் செய்யவுள்ளார்.

இதன்போது இரண்டு மாவட்டங்களிலும் நடைபெறும் பல்வேறு நிகழ்வுகளிலும் அவர் கலந்துகொள்ள வுள்ளார்.

இதற்கமைய இன்று காலையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் பிரதமர், யாழ். மாவட்ட செயலகத்தில் காலை 9 மணிக்கு நடைபெறும் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளார்.

06

## முடிவுக்கு வந்தது ரயில் நிலைய அதிபர்களின் பணிப்புறக்கணிப்பு



ரயில் நிலைய அதிபர்கள் மற்றும் கட்டுப்பாட்டாளர்களின் பணிப்புறக் கணிப்பு கைவிடப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தனவுடன் நேற்று இடம்பெற்ற பேச்சையடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது ரண்டு தெரிவிக் கப்பட்டுள்ளது.

06




தெல்லிப்பளை துர்க்கைஅம்மன் ஆலய மகளிர் இல்லம் தொடர்பாக தேவையற்ற – சமூக விரோதப் போக் குடைய – பொய்யான – நட்டாமுட்டித்தனமான – செய்திகளை பொறுப் பற்ற, ஊடக கம்பனி ஒன்று தவறான உள்நோக்கத்தோடு தொடர்ந்து வெளியிட்டு வருவது தமிழ் உலக மறிந்த உண்மை. அது குறித்து ஏற்கனவே சில விடயங்களை அம்பலப்படுத்தி இருக்கி றேன். 'கெடுவான் கேடே நினைப்பான்'. அதுவே நடக்கின்றது. ஊர் நாறும் அந்த ஊடகக் குளறுபடிகள் குறித்து கம்பவாரிதி ஜெயராஜ் வரை எல்லோரும் பல உண்மை களை விளம்பியுள்ளார்கள். அதன் செய்தி களின் பின்னால் இருக்கும் வக்கிர புத்தி யைப் பலரும் தெளிவாகச் சுட்டிக்காட்டி உள்ளனர். அது பற்றிய மேல் விவரங்களை பின்னர் பார்ப்போம்.

ஆனால், இப்போது இந்தக் குழப்பங் களுக்கெல்லாம் கால்கோளிட்ட

06



# மலையகப் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் கிட்டும்!

மலையகத்தில் பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனத்தை வழங்குவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டு வருவதாகக் கல்வி இராஜாங்க அமைச்சர் ஏ.அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

பலாங்கொடை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு, அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தற்போது வரை பெறப்பட்டுள்ள தரவுகளின் அடிப்படையில் 1,700 பட்டதாரிகள் மலையகத்தில் உள்ளனர்.

அதேநேரம், தொடர்ந்தும் தரவுகள் சேகரிக்கப்பட்டு வருவதுடன், அவர்களுக்கான நியமனத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கல்வி இராஜாங்க அமைச்சர் ஏ.அரவிந்த குமார் தெரிவித்துள்ளார்.

# 100 வயதைக் கடந்த 450 பேர் இலங்கையில் வசிக்கின்றனர்



100 வயதைக் கடந்த 450 பேர் இலங்கையில் வசிக்கின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நாடாளுமன்றில் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர்கள் வயது முதிர்ந்தவர்களுக்கான விசேட அரச கொடுப்பனவுக்குத் தகுதி பெற்றுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நாட்டில் 2.7 மில்லியன் பேர் 60 வயதைக் கடந்தவர்களாக இருக்கின்றனர் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேலும் தெரிவித்துள்ளார்.

# சீனாவுடனான உறவுகளை ஆழப்படுத்த இலங்கை அரசு முயற்சிக்க வேண்டும்

## சீனத் தூதுவர் தெரிவிப்பு



அபிவிருத்தி மற்றும் சவாலான காலங்களில் சீனாவின் நிலையான ஆதரவைக் கருத்திற் கொண்டு, சீனாவுடனான தங்களது உறவுகளை மேலும் ஆழப்படுத்த இலங்கை முயற்சிக்க வேண்டும் என இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ ஷென்ஹொங் தெரிவித்துள்ளார்.

சீனாவின் விரைவான பொருளாதார வளர்ச்சி மற்றும் செழிப்பைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் இலங்கை பயனடைய முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கை - சீன வர்த்தக சபையின் 23 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், சீன - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை பேச்சு வார்த்தைகளை முன்னெடுப்பதில் எந்தத் தயக்கமும் இருக்கக் கூடாது எனவும் இலங்கைக்கான சீனத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

குறைந்த வருமானம் கொண்ட நாடான கம்போடியா 2020 ஆம் ஆண்டு சீனாவுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதன் ஊடாகப் பாரியளவான நன்மைகளை அடைந்துள்ளதாகவும் இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ ஷென்ஹொங் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கூட்டுறவுச் சங்கங்களின் வீழ்ச்சியைத் தடுக்க முறையான வேலைத்திட்டம் மிகவும் அவசியம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் தெரிவிப்பு



"இலங்கையில் கூட்டுறவுச் சங்கங்கள் வீழ்ச்சியடைகின்றமையைத் தடுப்பதற்கான வேலைத்திட்டத்தை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கூட்டுறவுத் திட்டங்கள் தொடர்பாக நேற்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"கூட்டுறவுச் சங்கங்கள் என்பது இலங்கையில் மாத்திரமன்றி சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட வெற்றிகரமான சமூக தொழில் முனைவு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டதொரு முன்னெடுப்பாகும்.

தற்போது, நாடு முழுவதும் சுமார் 14,000 கூட்டுறவுச் சங்கங்கள் காணப்படுகின்றன.

ஆனால், பல்வேறு சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகளினால் அவற்றின் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டின் கூட்டுறவுச் சங்கங்கள் வீழ்ச்சியடைகின்றமையைத்தடுக்கவும்,அவற்றைமேம்படுத்தவும்விசேடவேலைத்திட்டத்தை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.

சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்கள் வீழ்ச்சியடைந்து வரும் இவ்வேளையில், சிறுதொழில்களை மீண்டும் வலுவூட்டுவதற்கு கூட்டுறவுச் சங்கங்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும்." – என்றார்.

# இருபதுக்கு – 20 கிரிக்கெட் அணியின் தலைவர் பொறுப்பிலிருந்து விலகினார் வனிந்து ஹசரங்க




இலங்கை இருபதுக்கு – 20 கிரிக்கெட் அணியின் தலைவர் பொறுப்பிலிருந்து வனிந்து ஹசரங்க விலகியுள்ளார் என இலங்கைக் கிரிக்கெட் நிறுவனம் அறிவித்துள்ளது.

அணித்தலைவர் பொறுப்பிலிருந்து விலகி சாதாரண வீரராக அணியில் இடம்பெறத் தாம் தீர்மானித்தமை இலங்கை கிரிக்கெட்டுக்கு நன்மை பயக்கும் என்று வனிந்து ஹசரங்க கூறியுள்ளார் என்று இலங்கைக் கிரிக்கெட் நிறுவனம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை – இந்திய அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடரின் போட்டி அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் நடைபெறும் இந்தத் தொடரில் 3 சர்வதேச ஒருநாள் மற்றும் 3 சர்வதேச இருபதுக்கு – 20 போட்டிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 26 ஆம் திகதி ஆரம்பமாகும் சர்வதேச இருபதுக்கு – 20 தொடரின் 3 போட்டிகளும் கண்டி பல்லேகெலே மைதானத்தில் நடைபெறவுள்ளன.

3 சர்வதேச ஒருநாள் போட்டிகளும் கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நடைபெறவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# ரயில் சேவைகள் குழப்பத்தால் சுற்றுலா பயணிகளும் பாதிப்பு





கடந்த இரண்டு நாள்களாகத் தொடரும் ரயிவே அதிகாரிகளின் பணிப்புறக்கணிப்புக் காரணமாக வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் உட்பட ரயிலில் பயணிக்கும் பலர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

ரயில்வேப் பணிப் பகிஷ்கரிப்புக் காரணமாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் குழுவொன்று நேற்று 11 ஆம் திகதி ரயிலில் பயணிக்க ஹட்டன் ரயில் நிலையத்திற்கு வந்திருந்த நிலையில் ஹட்டன் ரயில் நிலையம் மூடப் பட்டிருந்ததால் அவர்களும் பயணிகளும் ஏனைய மக்களும் சிரமங்களை எதிர் நோக்கினர்.

ரயில்வே வேலை நிறுத்தம் காரணமாக ஹட்டன் ரயில் நிலையம் வெறிச்சோடிக் காணப்பட்டது.




ரயில் நிலையத்தில் அதன் பாதுகாப்பிற்காக பொலிஸாரும் இராணுவத்தினரும் ஈடுபடுத்தப்பட்டனர்.



# பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டதால் வேலையை இழந்த ரயில்வே ஊழியர்கள்

கடமைக்குத் திரும்பாத ரயில் நிலைய அதிபர்கள் உள்ளிட்ட ரயில்வே திணைக்கள அலுவலர்கள், பணியிடை விலகியவர்களாக கருதி, கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ரயில்வே திணைக்கள பொது முகாமையாளரால், ரயில் நிலையங்களின் அதிபர்களுக்கு இந்தக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன எனப் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ரயில் நிலைய அதிபர்கள் மற்றும் கட்டுப்பாட்டாளர்கள் திடீர் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்து நடத்தி வருகின்றனர்.

ரயில் சேவை அத்தியாவசியச் சேவையாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளநிலையில், நேற்று முன்தினம் 12 மணிக்குள் கடமைக்குத் திரும்பாதவர்கள் பணியிடை விலகியவர்களாகக் கருதப்படுவார்கள் என்று அரசாங்கம் அறிவித்திருந்தது.

இதன் அடிப்படையில் நேற்று முன்தினம் மதியம் 12 மணிக்குள் கடமைக்கு திரும்பாத ரயில்வே திணைக்களப் பணியாளர்கள் அனைவரும் பதவி விலகியவர்களாகக் கருதப்பட்டு, அவர்களுக்கான கடிதங்கள் நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (பின்னர் வந்த செய்தி 1ஆம் பக்கத்தில்...)

# இன்று முதல் மாவட்ட மட்டத்தில் ஜனாதிபதியின் புலமைப்பரிசில்




க.பொ.த. உயர் தரம் மற்றும் முதலாம் தரம் முதல் 11 ஆம் தரம் வரைக் கல்வி கற்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்தின் மூலம் வழங்கப்படும் புலமைப்பரிசில் உதவித் தொகையை இன்று முதல் மாவட்ட மட்டத்தில் செயற்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கொழும்பு மாவட்டத்தில் மாணவருக்கு புலமைப்பரிசில்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அலரி மாளிகையில் இடம்பெற்றதுடன் ஏனைய 24 மாவட்டங்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று முதல் நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ளது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, பதுளை, மாத்தளை மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களில் நாளையும், கிளிநொச்சி மாவட்டத்தில் ஜூலை 14ஆம் திகதியும், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் இன்றும், ஜூலை 15 ஆம் திகதியும், கம்பஹா மாவட்டத்தில் ஜூலை 16 மற்றும் 17 ஆம் திகதிகளிலும், காலி மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் எதிர்வரும் 15 ஆம், 16 ஆம் திகதிகளிலும், வவுனியா, மட்டக்களப்பு, இரத்தினபுரி, கேகாலை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களிலும், களுத்துறை, மன்னார், அம்பாறை, குருநாகல், கண்டி மாவட்டங்களிலும் ஜூலை 17ஆம் திகதியும், முல்லைத்தீவு, திருகோணமலை, பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் ஜூலை 18 ஆம் திகதியும், மொணராகலை, மாத்தறை மாவட்டங்களில் ஜூலை 19ஆம் திகதியும், புத்தளம் மாவட்டத்தில் ஜூலை 22 ஆம் திகதியும் புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாவட்ட செயலாளர்கள் தலைமையில், அனைத்து வலயக் கல்வி அலுவலகங்கள் மற்றும் அதிபர்களின் ஒருங்கிணைப்புடன், இந்தப் புலமைப்பரிசில் வழங்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். முதலாம் கட்டத்தில் புலமைப் பரிசில் பெறும் மாணவர்களில் ஒருபகுதியினர் மாத்திரம் புலமைப்பரிசில் வழங்கும் விழாவிற்கு அழைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் க.பொ.த உயர் தரம் கற்கும் மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப் பரிசில் திட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் பெயர்ப் பட்டியல் ஏற்கனவே வலய மட்டத்தில் ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் பதிவேற்றப்பட்டுள்ளது.

இதன்படி, ஏதாவது பாடசாலை புலமைப்பரிசில் பெற விண்ணப்பிக்கவில்லை என்றால், அது தொடர்பில் ஆராய்ந்து விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு பெற்றோர் மற்றும் பிள்ளைகளை ஜனாதிபதி நிதியம் கோருகிறது.


Muhurtham
Jewels
PRESENTS
PRADEEP
kumar
BUY TICKETS ON
eventbrite
SCAN NOW
JULY
27
2024
LIVE IN
TORONTO
CANADA EVENT CENTER
EVENT BY
tamil one
SV MEDIA
RADIO PARTNER
PRINTING PARTNER
E PAPER PARTNER
DESIGN BY
FM
88.9 HD3 & 105.9
INK DRIP
முரசு
DESIGN WOLF.CA

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வடக்கு ஆளுநரின் பொறுப்பற்ற செயற்போக்குக் குறித்தும் தமிழ் மக்கள் கவனிக்க வேண்டும்.

"வடக்கு ஆளுநரின் அறிவுறுத்தல்களில் இருந்து மாறுபட்ட வகையில் சில ஊடகங்களும் சமூக வலைத்தளங்களும் வெளியிடும் செய்திகளுக்கு ஆளுநர் பொறுப்புக் கூற முடியாது" - என்று அவரது அலுவலகம் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அந்த அறிக்கை குறிப்பிடுமாற் போல அவரது முன்னைய அறிக்கையைத் திரித்துத்தான் அந்தப் பத்திரிகை மூன்றாம் தர விதத்தில் செய்தி வெளியிட்டு கீழ்த்தரமான பரப்புரையை முன்னெடுத்து தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்தியது என்பது உண்மைதான்.

அதற்கு ஆளுநர் பொறுப்பு கூறிய வேண்டியவர் அல்லர். பொறுப்புக் கூறலின் அர்த்தம் குறித்து ஆளுநருக்குத் தெரியுமோ இல்லையோ, தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும்.

இந்த விடயத்தில் ஆளுநருக்கு பொறுப்புக் கூறும் கடப்பாடு இருக்கின்றதோ இல்லையோ என்பது இரண்டாவது விடயம். அதைப் பின்னர் பார்க்கலாம். ஆனால் நிலைமையை தெளிவுபடுத்த வேண்டிய - உண்மையை சுற்றி வளைத்து சமாளிக்காமல், வெளிப்படையாக - தெளிவாக - பேச வேண்டிய பொறுப்பு அவருக்கு உள்ளது.

விவகாரம் இவ்வளவு விஸ்வரூபம் எடுத்த பின்னரும், ஆளுநர் என்ற மேன்மை தங்கிய கதிரைக்கு பின்னால் ஒளித்து இருந்து, மேம்போக்காக அறிக்கை விட்டு, குழப்பத்தை நீடிக்க அனுமதிப்பது அழகல்ல.

அதுவும் கிறிஸ்தவரான அவர், இந்த விடயத்தில் இந்து விரோதியாகச் செய்பட்டு விட்டாரோ என்ற சந்தேக உணர்வு இந்துக்களை அதிகம் கொண்ட வடக்கில் ஊறி வருகையில், துணிவுடன் வெளியே வந்து, உண்மையை வெளிப்படையாகப் பேசி, பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அவர் வழி செய்திருக்க வேண்டும்.

சரியோ, பிழையோ இந்த விடயத்தில் ஆளுநர் பந்தாவை விட்டு வெளியே வந்து, மக்களோடு நின்று, கருத்துகளைப் பரிமாறி, விடயங்களை அந்தந்த இடத்திலேயே தீர்த்துக் கொள்வதில் மிகவும் வயதில் இளைஞரான கிழக்கு மாகாண ஆளுநரிடம், அரச சேவையில் பழமும் தின்று கொட்டையும் போட்ட வடக்கு ஆளுநர் கேட்டுத்தான் படிக்க வேண்டும்.

இவ்விடயத்தில் வடக்கு ஆளுநரின் முதல் அறிக்கையும் தெளிவற்றது. குழப்பமானது. அது கையாளும் விடயத்தின் உணர்வு பூர்வ தன்மையை கருத்தில் எடுக்காது பொறுப்பற்ற விதத்தில் தயாரிக்கப்பட்டது. அதனால் அது விடயத்தில் ஆளுநர் பொறுப்புக் கூறத்தான் வேண்டும்.

நேற்று முன்தினம் வந்த அறிக்கையும் 'சமாளிபிகேஷன்' வேலைக்கானதே தவிர, தெளிவானதோ உண்மையை வெளிப்படையாக விளக்கி, மக்களின் குழப்பத்தைத் தீர்த்து வைப்பதை நோக்கமாகக் கொண்டதோ அல்ல என்பது தெளிவு.

மக்களைக் குழப்பத்தில் வைத்து அரசியல் செய்யும் போக்கு ஆளுநருக்கு அவசியமற்றது. அவர் ஏன் அப்படி நடந்து கொள்கின்றார் என்று தெரியவில்லை.

பத்திரிகைகள் பண்ணும் குசும்புக்கு நான் என்ன செய்வது என்ற வீம்புத்தனம் அவரது நடத்தையிலும் அறிக்கையிலும் தொனித்தாலும், அதை மீறி இந்த விடயத்தில் தாய்மை உள்ளத்தோடு நடந்து, உண்மைகளை அப்பட்டமாக வெளிப்படுத்தி, குழப்பத்தைத் தீர்த்து, நற்காரியங்கள் தடையின்றித் தொடர்வதை உறுதிப்படுத்த வேண்டியது அவரது நிலைக்கும் பதவிக்கும் பொறுப்பான கடமையாகும்.

அந்தப் பத்திரிகை போல ஆளுநரும் எழுந்தமானமாகத்தான் - பொறுப்பில்லாமல்தான் - நடந்து கொள்வாராயின் காலம் அதற்கு உரிய பதிலை கூறும் என்று அமைவதைத் தவிர வேறு வழி இல்லை.

ஆனாலும் இவ்விடயத்தில் பத்திரிகைக்கு எதிரான வழக்கு நீதிமன்றத்துக்கு வரும்போது இவ்விடயங்களில் இப்போது வெளியிடாமல் - தெளிவுபடுத்தாமல் - இருக்கும் விளக்கங்களை ஆளுநர் அம்மா நீதிமன்றத்தில் வந்து கூறத்தான் வேண்டியிருக்கும் என்பதை மறந்து விடக் கூடாது.

ஆளுநரின் முதலாவது அறிக்கை கடந்த நாலாம் திகதி ஊடகங்களில் வெளியானது. 'காலை முரசு'ம் அதை வெளியிட்டது. ஆனால் அதற்கு முன்னர் - அந்த அறிக்கைக்கு முன்பாக - இவ்விடயத்தை ஒட்டிய எமது செய்தியாளர்களின் தகவல்களைப் பிரசுரித்திருந்தோம். அதற்குப் பின்னிணைப்பாக ஆளுநர் தரப்பின் அறிக்கையை சேர்த்திருந்தோம்.

எமது செய்தியில் தெல்லிப்பளைப் பகுதியில் பதிவு செய்யப்படாமல் இரண்டு இடங்களில் இயங்கிய சிறுவர் இல்லங்களை மூடி, அந்தச் சிறுவர்களை பதிவு செய்யப்பட்ட வேறு இல்லங்களுக்கு மாற்ற வடக்கு ஆளுநர் உத்தரவிட்டுள்ளார் என்று நாம் குறிப்பிட்டு இருந்தோம்.

'துர்க்கை அம்மன் மகளிர் இல்லம்' குறித்து எதுவும் நமது செய்தியில் குறிப்பிடப்படவில்லை.

ஆனால் அந்த செய்தியின் இணைப்பாக வந்த ஆளுநர் அலுவலக அறிக்கையில் 'தெல்லிப்பளை பகுதியில் இயங்கிய மகளிர் மற்றும் சிறுவர் இல்லங்களை மூடிவிடும்படி ஆளுநர் பணிப்புரை விடுத்து இருக்கின்றார்' என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதுவே, அந்தத் தெளிவற்ற அரை குறை அறிக்கையே, அந்த ஊடகம் கை, கால் வைத்து, செய்தி தயாரித்து, தனது நட்டாமுட்டித்தனத்துக்கு வசமாக பயன்படுத்த உதவியது. அது வேறு விடயம்.

ஆனால் அன்று அப்படி அறிக்கையிட்ட ஆளுநர் தரப்பு பின்னர் நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையில் 'சம்பந்தப்பட்ட இல்லம் ஒன்றில் கண்டறியப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்ய எடுக்கப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகள் பற்றிய அறிவுறுத்தல்கள் உரிய திணைக்களங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன' - என்று பிளேட்டை மாற்றி உள்ளது.

'அன்று அந்த இல்லத்தை மூடும்படி நான் பணிப்புரை விடுத்ததாக வெளியான அறிக்கைதான் குழப்பத்துக்கு வித்து. அதைத் திருத்திக் கொண்டுள்ளேன். அறிக்கையினால் ஏற்பட்ட குழப்பத்தையும் தவறான புரிதல்களையும் மறந்து விடுங்கள்!' என்ற சாரப்பட உண்மையை வெளிப்படையாக உரைத்து, சமூகத்தின் சீரிய தன்மையைப் பேணுவதற்காக அரவணைத்து நடப்பது 'பொறுப்பு கூறல்' என்றால் அதை பொறுப்பு கூறலாக ஆளுநர் செய்திருக்க வேண்டும். 'விளக்கம் அளித்தல்' என்றால் அந்தப் பாணியில் விளக்கம் அளித்து இருக்க வேண்டும்.

இந்தப் பதவிகள் எல்லாம் நிரந்தரமானவை அல்ல. ஆனால் சமய, சமூக சேவை இந்த மண்ணுக்கு நிரந்தர தேவை. அதை ஆப்படித்துக் குழப்பி விட்டு அமைதி வாழ்வுக்கு திரும்புவதற்கு ஆண்டவனும் இடம் அளியான்.

ஊடக நட்டாமுட்டித்தனத்துக்குப் பயந்து, அதனுடன் கூட்டு சேருவதை நிறுத்துவது ஆளுநருக்கு நல்லது. தமது மூல அறிக்கை - தெளிவற்ற பிந்திய அறிக்கை - இரண்டுக்கும் இடையில் விட்ட கால அவகாசம் - ஆகியவற்றின் மூலம் தெரிந்தோ தெரியாமலோ ஊடகம் ஒன்றின் நாச வேலைகளுக்கு இயேசுவின் தொண்டரான ஆளுநர் அம்மா துணை போயிருக்கின்றார் என்பது பல இந்துக்களினதும் வேதனை.

இந்தத் தவறான புரிதல்களை களைவதற்கு இன்னும் காலம் பிந்து விடவில்லை.

பதவிகள் போனபின் அவற்றைக் களைய வாய்ப்பிருக்காது என்பது மாத்திரமல்ல, கடந்து போனவை நிரந்தர சரித்திரமாக பதியப்பட்டு விடும் என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

## இந்திய மீனவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

தமிழகத்தின் நாகை மாவட்டத்தில் இருந்து புறப்பட்ட 3 படகுகள் நெடுந்தீவுக் கடற்பரப்பரப்புக்குள் எல்லை தாண்டி உட்புகுந்த சமயமே கடற்படையினரால் கைப்பற்றப்பட்டதோடு அதில் இருந்த 13 மீனவர்களும் கைது செய்யப்பட்டனர்.

மேற்படி 13 மீனவர்களையும் காங்கேசன்துறை துறைமுகத்தில் கொண்டு வந்து இறக்கிய கடற்படையினர், மீனவர்களை மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தில் வைத்து யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட 13 மீனவர்களையும் ஊர்காவற்றுறை நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்தபோது அவர்களை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

## முடிவுக்கு வந்தது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ரயில் நிலைய அதிபர்கள் மற்றும் கட்டுப்பாட்டாளர்கள் நேற்றுமுன்தினம் முதல் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இந்தநிலையில், இன்று முதல் வழமை போல ரயில் சேவை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## பிரதமர் யாழ்.விஜயம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தக் கூட்டத்தின் நிறைவில் சீன அரசால் அன்பளிப்புச் செய்யப்பட்ட அரிசி, யாழ். மாவட்ட மீனவர்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளது. இந்த இகழ்வில் பிரதமருடன் இலங்கைக்கான சீனத் தூதுவரும் கலந்துகொள்ளவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து முற்பகல் 11 மணியளவில் சுன்னாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய தபால் நிலையக் கட்டடத்தைப் பிரதமர் திறந்து வைக்கவுள்ளார்.

முற்பகல் 11. 45 மணியளவில் குருநகர் மீனவர் துறைமுகம் அருகே உள்ள மீனவர் ஓய்வு மண்டபத்தில் மீனவர் குடும்பங்களுக்கு மீன்பிடிச் சாதனங்கள் மற்றும் உலர் உணவுகளை அவர் வழங்கி வைக்கவுள்ளார்.

நண்பகல் 12 மணியளவில் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட அரச ஊழியர் குழுவுக்கு நிரந்தர நியமனம் வழங்கி வைக்கவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள புதிய வர்த்தக சேவை நிலையத்தைப் பிற்பகல் 14. 30 மணிக்குத் திறந்து வைக்கவுள்ளார்.

மாலை 3 மணிக்குக் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெறும் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் அவர் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கொம்பனித்தெரு மேம்பாலம் மக்கள் பாவனைக்குத் திறப்பு

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் 5,278 மில்லியன் ரூபா செலவில் கொம்பனித்தெருவுக்கும் நீதிபதி அக்பர் மாவத்தைக்கும் இடையில் ரயில் பாதைக்கு மேலால் நிர்மாணிக்கப்பட்ட மேம்பாலத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று திறந்து வைத்தார்.

நாளாந்தம் 109 ரயில் பயணங்களுக்காக ரயில்வே கடவை மூடப்படுவதால் ஏற்படும் தாமதம் மற்றும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் நோக்கில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட இத்திட்டத்தின் நிர்மாணப்பணிகள் மாகா பொறியியல் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

அரச அலுவலகங்கள், வைத்தியசாலைகள், மத வழிபாட்டுத் தலங்கள், உணவகங்கள், திரையரங்குகள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களைக் கொண்ட வர்த்தக நகரப் பகுதியான கொம்பனித்தெரு பிரதேசத்தில் அமைந்துள்ள புகையிரதக் கடவையால் நாளாந்தம் சுமார் 03 மணித்தியால நேரவிரயம் ஏற்படுவதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த மேம்பாலத் திட்டம் நிறைவடைந்ததன் பின்னர் கொம்பனித்தெருவில் இருந்து காலி முகத்திடல் மற்றும் ஜனாதிபதி செயலகம் நோக்கி போக்குவரத்து நெரிசலின்றி பயணிக்க முடியும். மேலும், வாகன நெரிசல் காரணமாக வீதியில் வீணாகும் மக்களின் நேரத்தை தேசிய பொருளாதாரத்தில் இணைக்க முடியும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது..

இந்த நிகழ்வில், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ரூபசிங்க உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.













# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## வேலை நிறுத்த அழுத்தம்

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் இச்சமயத்தில் அரசியல் அக்கப்போர் தொழிற்சங்கப் போராட்டமாகவும் வேறு வடிவம் எடுக்கும் தோற்றம் - போக்கு - தென்படுகின்றது.

தொழிற்சங்கப் போராட்டங்கள் வழக்கமாக ஆளும் தரப்புக்கு தலையிடி தரும். செல்வாக்கை இழக்க வைக்கும்.

இப்போது ஜனாதிபதித் தேர்தலை முகாந்தரமாக முன்னிறுத்தி, தீவிரமடையும் தொழிற்சங்கப் போராட்டம் ஆளுந்தரப்புக்குத் தொல்லையாக - தலையிடியாக - மாறி வருகின்றது என்பது உண்மைதான். ஆளும் தரப்புக்கு மட்டுமல்லாமல் பொதுமக்களுக்கும் நெருக்கடியாக அது மாறி வருகின்றமை கண்கூடு.

ஆனால், இந்தப் போராட்டம், அதை நடத்துபவர்களுக்கு ஆதரவையும் செல்வாக்கையும் வலிமையையும் கூட்டி, ஆளும் தரப்புக்கு செல்வாக்கு இழப்பையும், பாதிப்பையும் தருமா அல்லது தலைகீழாக மாறுமா என்பது தான் கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

மக்களின் கடந்த கால அனுபவங்கள், நெருக்கடிகள், அது பற்றிய அவர்களின் கருத்தியல்கள், மனக் கோலங்கள் போன்றவற்றை எல்லாம் கவனத்தில் கொண்டு, மதிநுட்பத்துடன் ஆராய்ந்து, நுணுக்கமாக தீர்மானம் எடுக்க வேண்டிய தொழிற்சங்கங்கள், மாறாக, சூதாட்டத்தில் நம்பிக்கை வைப்பது போல இந்த வேலைநிறுத்தப் போராட்டத்திலும் நம்பிக்கை வைத்துச் செயற்படுகின்றனவோ என்றுதான் சந்தேகம் எழுகின்றது.

ஆனால் ஆட்சி தரப்பு - ஆளும் தலைமை - கனகச்சிதமாகவும், அந்தரப்படாமலும் பதில் காய் நகர்த்தல்களை செய்கின்றது என்றே தெரிகிறது. இந்த வேலைநிறுத்தம் அரசுக்கு மட்டுமல்ல, மக்களுக்கும் எதிரானது என்ற எண்ணத்தை - கருத்தை - அரசு தந்திரமாக விதைத்து வருகிறது.

நாடு பொருளாதார ரீதியில் எத்தகைய அதலபாதாளத்தில் வீழ்ந்து கிடந்தது, 2022 வரிசை யுகத்தில் எப்படி நெருக்கடிகளை அனுபவித்தோம் என்பவை எல்லாம் அவ்வளவு விரைவில் மக்கள் மனதை விட்டு அகல மாட்டா.

அதிலிருந்து மீளுவதற்காக எக்கச்சக்கமான வரிகளை ஒவ்வொரு பொருள்களுக்கும் - ஒவ்வொரு சேவைக்கும் - தாங்கள் இன்று செலுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மக்கள் உணர்ந்து, கொதித்துக் கொண்டிருக்கிறார்கள். வரி உயர்வுத் தாக்கத்தை சகிக்க முடியாமல் சகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இப்போதுசம்பளஉயர்வுகோரிபோராடுபவர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்கும் வசதி, வாய்ப்பு, நொடித்துப் போய் இப்போதுதான் மீண்டெழுந்து வரும் இலங்கையின் பொருளாதாரத்திற்கு கிடையவே கிடையாது என்ற தனது இயலாமையை ஆட்சித் தரப்பு வெளிப்படையாக திறந்து காட்டிக்கொண்டு இருக்கின்றது. அது சரியோ, தவறோ, உண்மையோ, பொய்யோ அதனை மக்கள் நம்பும் நிலைமையே இங்கு நீடிக்கின்றது. மக்களின் மனதை அந்த கணக்கு ஆழமாகத் தாக்கியும் உள்ளது.

இந்தச் சமயத்தில் இப்படித் தொழிற்சங்க போராட்டம் என்று கழுத்தைப் பிடிப்பவர்களின் அழுத்தத்திற்கு அரசு மசிந்து, இணங்கிப் போவதாயின், மீண்டும் வற்வரி போன்றவற்றை அதிகரித்து, அந்தச் சுமையை மக்கள் வாங்கும் பொருள்கள் மற்றும் பெறும் சேவைகள் மீதுதான் சுமத்த வேண்டி இருக்கும் என்று பகிரங்கமாக - திரும்பத்திரும்ப - கூறுவதன்மூலம் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ளதொழிற்சங்கங்களின்பந்துவீச்சுக்குச் சரியான பதிலாட்டத்தை அரசு முன்னெடுக்கின்றது என்பது தெளிவு.

இப்போது தரப்புக்கள், தொழிற்சங்கங்கள் முன்னெடுக்கும் போராட்டம் நாடு தழுவிய தேசிய வேலை நிறுத்த இயக்கமாக மாறக்கூடிய சூழல் இருந்தாலும், அதற்கு எதிரான மக்கள் உணர்வும் நிறையவே வெளியே தெரியாமல் - அசுமாத்தமின்றி - சத்தம் சந்தடியின்றி - கருக்கொண்டு, உருக்கொண்டு வருவதும் அவதானிக்கத்தக்கது.

இந்த வேலைநிறுத்தக்காரர்களின் மோசமானநிபந்தனைகளுக்கு - அழுத்தங்களுக்கு - வேறு வழியின்றி அரசுத்தலைமை இணங்குமாயின், அந்தச் செலவினம் வற் வரி அதிகரிப்பாக உடனடியாக - நேரடியாக - தங்கள் மீது கட்டப்படும் என்று செய்தியை ஆளுந்தரப்பு மக்களுக்கு தெளிவுபட, அவர்களின் மனதில் உறைக்கத்தக்க விதத்தில் உரைத்து வருவது இந்த வேலை நிறுத்த போராட்டத்தில் முக்கிய விடயம்.

துண்டு துண்டாக முன்னெடுக்கப்படும் வேலை நிறுத்தம், பணிப் புறக்கணிப்பு, சட்டப்படி வேலை போன்ற அதிருப்தி நடவடிக்கைகள் நாடு தழுவிய தேசிய வேலை நிறுத்தமாக விஸ்வரூபம் எடுக்கலாம். ஆனால் அதற்கு எதிராக மக்கள் கருத்தும் விஸ்வரூபம் எடுக்கும் ஆபத்தும் இல்லாமல் இல்லை.





# அசாம் வெள்ளத்தால் பலியானோர் எண்ணிக்கை 84 ஆக அதிகரிப்பு!

அசாம் மாநிலத்தில் வெள்ளப் பெருக்கில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 84 ஆக உயர்வடைந்துள்ளது.

அசாம் மாநிலத்தில் கடந்த சில நாள்களாகப் பெய்து வந்த கனமழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சிக்கி 27 மாவட்டங்களைச் சேர்ந்த 14.39 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, 2580 கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன எனவும், 1,57,000 பேர் இன்னும் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வெள்ளம் காரணமாக காசிரங்கா தேசிய பூங்காவில் இதுவரை ஒன்பது காண்டாமிருகங்கள் உட்பட 159 வன விலங்குகள் இறந்துள்ளன என பூங்கா நிர்வாகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழக மீனவர்கள் 13 பேர் கைது: ஜெய்சங்கருக்கு ஸ்டாலின் கடிதம்

“இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்கள் விவகாரத்தில் மத்திய வெளியுறவுத் துறை வலுவான மற்றும் ஒருங்கிணைந்த முயற்சிகளை உடனடியாக மேற்கொண்டு, இலங்கை வசமுள்ள அனைத்து மீனவர்களையும், மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிப்பதை உறுதி செய்திட வேண்டும். இதுதொடர்பாக உரிய தூதரக நடவடிக்கைகளை முடுக்கி விட வேண்டும்.”

– இவ்வாறு இந்திய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

தமிழகத்தைச் சேர்ந்த 13 மீனவர்கள் வங்கக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ள தமிழகத்தைச் சேர்ந்த மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவித்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்தி வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு, தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

”தற்போது 173 மீன்பிடிப் படகுகளுடன், 80 மீனவர்களும் இலங்கை அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் உள்ளனர்.




மீனவர்கள் இதுபோன்று சிறைபிடிக்கப்படுவது, மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் கடுமையாக பாதித்துள்ளதோடு, அவர்களது குடும்பத்தினரை பெரும் சோகத்துக்கு உள்ளாக்கியுள்ளது.

எனவே, இந்த விவகாரத்தில் மத்திய வெளியுறவுத் துறை வலுவான மற்றும் ஒருங்கிணைந்த முயற்சிகளை உடனடியாக மேற்கொண்டு, இலங்கை வசமுள்ள அனைத்து மீனவர்களையும், மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிப்பதை உறுதி செய்திட வேண்டும்.

இது தொடர்பாக உரிய தூதரக நடவடிக்கைகளை முடுக்கி விட வேண்டும்.” என்று முதல்வர் தனது கடிதத்தில் வெளியுறவுத் துறை அமைச்சரை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.




# ரஷ்யாவின் தீவிர உதவியாளர் சீனா: நேட்டோ அமைப்பு குற்றச்சாட்டு

உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்யாவின் தீவிர உதவியாளராக சீனா செயற்பட்டு வருவதாக நேட்டோ அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

அமெரிக்காவின் வொஷிங்டென் நகரில் நேற்று முன் தினம் ஆரம்பமான நேட்டோவின் 75 வது ஆண்டு உச்சி மாநாட்டிலேயே இந்த குற்றச் சாட்டு முன்வைக்கப்பட்டது.

இதன்போது"ரஷ்யாவின் இராணுவத் திறனைப் புதுப்பிக்க சீன அரசு ஆயுதங்கள், ஆயுத பாகங்கள் மற்றும் தொழில் நுட்ப உதவிகள் என்பனவற்றை வழங்கி வருவதை நிறுத்த வேண்டும்" என நேட்டோ தலைவர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

அத்துடன், ரஷ்யாவுக்கு சீன அரசு செய்து வரும் உதவிகள் எதிர்காலத்தில் பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

# காசாவில் இருந்து பொதுமக்கள் உடனே வெளியேறவேண்டும்

## இஸ்ரேல் இராணுவம் எச்சரிக்கை









பாலஸ்தீனத்தில் ஹமாஸ் அமைப்பினர் கட்டுப்பாட்டில் உள்ள காசாவில் கடந்த 7 மாதங்களுக்கு மேலாக இஸ்ரேல் படையினர் கடும் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த போரில் இதுவரையான காலப்பகுதியில் 38 ஆயிரம் பேர் வரை பலியாகியுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில், காசாவில் இறுதிக்கட்ட போருக்கு இஸ்ரேல் தயாராகி வருகிறது. கடந்த 2 வாரமாக தனது தாக்குதலை தீவிரப்படுத்தி உள்ளது.

இதையடுத்து காசாவில் இருந்து பொதுமக்கள் பாதுகாக்கப்பட்ட பாதை வழியாக உடனே வெளியேறுமாறு இஸ்ரேல் இராணுவம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

காசாவில் தற்போது 3 லட்சத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வருகின்றன நிலையில், இஸ்ரேல் இராணுவம் எச்சரிக்கையால் அவர்கள் பீதி அடைந்துள்ளனர். இஸ்ரேலின் இந்த நடவடிக்கை மிகவும் கவலை அளிப்பதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

# ஹிருணிகாவின் பிணை மனு 15ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவிற்கு பிணை வழங்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட பிணை மனுமீதான விசாரணை ஒத்திவைக் கப்பட்டுள்ளது.

இந்த மனு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல ரணராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது பிணை விண்ணப்பத்திற்கு எதிராகச் சட்டமா அதிபர் எழுத்துமூல சமர்ப்பணங்களைத் தாக்கல் செய் தார்.

இந்த நிலையில் இந்த வழக்குமீதான விசாரணை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள் ளது.

2015 ஆம் ஆண்டு தெமட்டகொடை பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் சேவையாற்றிய இளைஞர் ஒருவரை கறுப்பு நிறத்திலான டிபெண்டர் ரக வாகனத்தில் கடத்திச் சென்று சித்திரவதைக்கு உள்ளாக்கிய சம்பவம் தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிரு ணிகா பிரேமச்சந்திரவிற்கு 3 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இது தொடர்பான தீர்ப்பு கடந்த 28 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமால் ரணராஜாவினால் அறி விக்கப்பட்டது. அவர் மீதான 18 குற்றச்சாட்டுக்கள் நிரூ பிக்கப்பட்டன.

அமில பிரியங்கர அமரச் சிங்க என்ற இளைஞரை, தமது பாதுகாவலர்களை ஈடுபடுத்தி, கடத்திச் சென்றது டன் அதற்கு ஆதரவு அளித்த குற்றச்சாட்டின் கீழ், ஹிரு ணிகா பிரேமச்சந்திர உள்ளிட்ட 9 பிரதிவாதிகளுக்கு எதிரா கச் சட்டமா அதிபர் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

தங்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்களை ஹிருணிகா பிரேமச்சந்திரவின் பாதுகாவலர்கள் ஒப்புக் கொண்டனர்.

முதல் கட்டத்திலேயே அவ்வாறு குற்றச்சாட்டுக்களை ஒப்புக்கொண்டதன் காரணமாக அவர்களுக்கு 12 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை உத்தரவைப் பிறப்பித்த மேல் நீதிமன்ற நீதிபதி 285,000 ரூபாவை அபராதமா கச் செலுத்துமாறும் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

# வேகக் கட்டுப்பாடு விதிகள் அடங்கிய வர்த்தமானி அடுத்த இரண்டு வாரங்களுக்குள் வெளியிடப்படும்

## போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவிப்பு



"வீதி விபத்துக்களை குறைப்பதற்கு வேகக் கட்டுப்பாடு தொடர்பில் தேவையான விதிமுறைகள் அடங்கிய வர்த்த மானியை எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது."

– இவ்வாறு போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"போக்குவரத்துத் துறையில் செயல்திறனை உருவாக்க பல திட்டங்களைத் தொடங்கியுள்ளோம். இதேவேளை, கடவத்தை பஸ் நிலையம் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் திறந்து வைக்கப்படவுள்ளது. இந்தப் பஸ் நிலையங்களில் நவீன போக்குவரத்து முகா மைத்துவ முறைகளும், நவீன தொழில்நுட்பங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

2023 இல் 2,214 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன. அந்த வீதி விபத்துகளில் 2,321 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த ஆண்டும் கடந்த மாதம் 30 ஆம் திகதி வரை 1,103 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன. அந்த வீதி விபத்துகளால் 1,154 பேர் உயிரிழந்துள்ளனர். எனவே, இந்நிலைமை யைக் குறைக்க எமது அமைச்சு பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது.

வேகக் கட்டுப்பாட்டுக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு 50 மில்லியன் ரூபாவை இலங்கை பொலிஸாருக்கு வழங்க வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை தீர்மானித்துள்ளது.

அத்துடன், போக்குவரத்து அமைச்சின் தலையீட்டுடன், வீதி வேகக் கட்டுப்பாடு தொடர்பில் தேவையான விதிமுறைகள் அடங்கிய வர்த்தமானி எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் வெளியிடப்பட உள்ளது.

மேலும், பாடசாலை மட்டத்தில் வீதிப் பாதுகாப்பு கழகங்களை நிறுவுவதற்கு தேவையான கையேடுகளை ஆசிரியர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது ஒரு இணைச்செயற்பாடாக பாடசாலைக் கட்டமைப் பில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் அதற்கு இணையாக பதக்கம் வழங்கும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், ரயில்வே பணிப்பகஷ்கரிப்பு தொடர்பான தீர்வு களை வழங்குவதில் தற்போது ஈடுபட்டுள்ளோம். 05 வருடங் களுக்கு ஒருமுறை நிலைய அதிபர்களின் பதவி உயர்வுக்கு தேவையான அனுமதியை அரச சேவை ஆணைக்குழு ஏற்கனவே வழங்கியுள்ளது. அதற்கான அமைச்சரவையின் அனுமதியைப் பெறுவதற்குத் தேவையான அமைச்சரவைப் பத்திரம் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது என்பதைக் குறிப் பிட வேண்டும்.

ஆனால் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள பணிப்ப கஷ்கரிப்பு வெறும் அரசியல் நோக்கத்திற்காகவே என்பது தற்போது மக்களுக்குத் தெளிவாகியுள்ளது. வேலைநிறுத் தங்கள் உண்மையான தொழிசங்க உரிமைகளுக்காக நடத்தப்படவில்லை என்பதையும் குறிப்பிட வேண்டும்." – என்றார்.




# உறவினரின் 10 லட்சம் ரூபாவை மோசடி செய்த பொலிஸ் அதிகாரிக்கு விளக்கமறியல் உத்தரவு

(ஆ.ரமேஸ்)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்று தரும் முகவர் நிலையம் ஒன்றுக்கு செலுத்த வேண்டிய பத்து லட்சம் ரூபாவை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் வழக்கு தொடுக்கப்பட்டிருந்த பொலிஸ் அதிகாரி ஒருவரை இம்மாதம் 25 ஆம் திகதி வியாழக்கிழமை வரை விளக்க மறியலில் வைக்க நுவரெலியா மாவட்ட நீதிவான் நீதிமன்றம் நேற்று மாலை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த உத்தரவை நுவரெலியா நீதிவான் பிரபுதிகா நாணயக்கார பிறப்பித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

நுவரெலியா விஷேட பொலிஸ் பிரிவில் கடமையாற்றி வரும் பொலிஸ் அதிகாரி ஒருவரின் உறவினர் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு செல்வதற்காக வெளிநாட்டு முகவர் நிலையம் ஒன்றுக்கு பத்து லட்சம் ரூபாய பணம் செலுத்த வேண்டியிருந்தது.

இந்தப் பணத்தை தனது உறவினரான பொலிஸ் அதிகாரிக்கு அனுப்பிவைத்து வேலைவாய்ப்பு முகவர் நிலையத்திற்கு செலுத்துமாறு கேட்டுள்ளார்.

ஆனால் நீண்ட நாள்களாக இந்தப் பணத்தை அந்தப் பொலிஸ் அதிகாரி செலுத்தாத நிலையில் தான் வெளிநாட்டு வேலைக்கு செல்ல முடியாத விரக்தியில் பொலிஸ் அதிகாரியின் உறவினர் பொலிஸ் முறைப்பாடு செய்து நுவரெலியா நீதிமன்றில் வழக்கு தொடுத்துள்ளார்.

இவ்வாறு தொடுக்கப்பட்டிருந்த வழக்கு விசாரணைக்காக நேற்று வியாழக்கிழமை பொலிஸ் அதிகாரி நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

விசாரணையில் பொலிஸ் அதிகாரி உறவினர் வழங்கிய பணத்தை முகவர் நிலையத்திற்கு வழங்காதமை தெரிய வந்தது.

இந்த நிலையில் உறவினர் வழங்கிய பணத்தை மோசடி செய்துள்ளதாக சந்தேகத்தின் பேரில் பொலிஸ் அதிகாரியை இம்மாதம் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

மேலும் இந்த வழக்கு தொடர்பான மேலதிக விசாரணையை செய்யப் பொலிஸாருக்கு உத்தரவிட்ட நீதிவான் விசாரணை அறிக்கையை அடுத்த வழக்கில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

இந்த வழக்கில் சந்தேக நபரான விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரி அண்மையில் வீதியில் இரண்டரை லட்சம் ரூபா பணத்துடன் கண்டெடுக்கப்பட்ட பணப்பையை நுவரெலியா சீத்தா எளிய சீதையம்மன் ஆலயத்தில் வழங்கி உரியவர்களிடம் ஒப்படைக்குமாறு கோரியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# வர்த்தமானி அறிவிப்பிற்கமைய சம்பளத்தை வழங்க 9 பெருந்தோட்ட நிறுவனங்கள் இணங்கியுள்ளன!

## தொழில் அமைச்சர் மனுஷ நாணாயக்கார தெரிவிப்பு

"பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பில் வெளியான வர்த்தமானி அறிவிப்பிற்கமைய சம்பளத்தை வழங்க 9 பெருந்தோட்ட நிறுவனங்கள் இணங்கியுள்ளன."

– இவ்வாறு தொழில் அமைச்சர் மனுஷ நாணாயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை வழங்காத பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு எதிராக அவர்களின் குத்தகை ஒப்பந்தத்தை இரத்து செய்யவும் சம்பளத்தை வழங்கும் நிறுவனங்கள் காணப்படுமாயின் அவர்களின் குத்தகை ஒப்பந்த காலத்தை நீடிப்பது தொடர்பிலும் அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட நிறுவனங்கள், அரச மற்றும் தனியார் பெருந்தோட்டங்களின் தலைவர்களுக்கு நேற்று முன்தினம் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்திற்குள் இது தொடர்பில் இறுதி தீர்மானத்தை மேற்கொள்ளுமாறு நீதிமன்றம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளமையின் அடிப்படையில், இம்மாதம் முதல்



பெருந்தோட்ட தொழிலாளர்களின் அடிப்படை சம்பளமான 1,350 ரூபாவை வழங்குமாறும் ஊக்குவிப்பு கொடுப்பனவு தொடர்பிலும் அவர்களிடம் கோரிக்கை விடுத்திருந்தோம். எமது கோரிக்கைகளுக்கு 9 நிறுவனங்கள் ஆதரவு வழங்கியுள்ளன.

அத்துடன், சில நிறுவனங்கள் ஊக்குவிப்பு கொடுப்பனவான 350 ரூபாவை விட அதிக தொகையை வழங்க தயாராக உள்ளன." – என்றார்.



# வன்னி மனித புதை குழியின் எதிர்கால அகழ்வின்போது மரபணு பரிசோதனைக்காக மாதிரிகள் சேகரிக்கப்படும்

## கொக்குத்தொடுவாய் அகழ்வாய்வு குறித்துத் தகவல்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

தொண்ணூறுகளின் நடுப்பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் போராளிகள் மற்றும் பெண் போராளிகளுடையவை என நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிபுணர் அறிக்கையின் அடிப்படையில் அனுமானிக்கப்பட்ட, வன்னிப் புதைகுழிகளின் சடலங்களை அடையாளம் காண, மரபணு பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டுமென, அகழ்வாராய்ச்சிக்குப் பொறுப்பான பிரதான தடயவியல் தொல்பொருள் ஆய்வாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வன்னியில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்க பட்டதையடுத்து, கொக்குத்தொடுவாய் வெகுஜன புதை குழியின் மீட்கப்பட்ட எச்சங்கள், காணாமல் போனவர்கள் உடையவையா எனக் காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தின் (OMP) தவிசாளர் மகேஷ் கட்டுலந்த சந்தேகம் வெளியிட்டிருந்தார்.

“காணாமல் போனவர்களின் தலைவிதியை மிக உயர்ந்த தரத்திற்கு அமைய கண்டறிவதோடு, இது வரையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள காணாமல் போனவர்களுக்கும், கண்டுபிடிக்கப்பட்ட சடலங்களுக்கும் இடையில் ஏதேனும் தொடர்பு உள்ளதா என்பதை கண்டறிய எதிர்பார்க்கின்றோம்.”

“காணாமல் போனவர்களை எவரேனும் அடையாளம் காண விரும்பினால், அதற்கு ஒரே வழி குழியிலிருந்து பெறப்பட்ட உயிரியல் கைரேகைகளை (biological fingerprints) பகுப்பாய்வு செய்வதே” என பேராசிரியர் ராஜ் சோமதேவ ஜுலை 10 கொக்குத்தொடுவாய் அகழ்வு இடம்பெறும் பகுதியில் வைத்து வன்னி ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

போரின் போது காணாமல் போனவர்களை அடையாளம் காண தேவையான உயிரியல் மாதிரிகள் ஏற்கனவே விசாரணைக் குழுவினரால் சேகரிக்கப்பட்டு வருவதாக தெரிவித்த தொல்பொருள் நிபுணர், நீதிமன்ற உத்தரவை பெற்று விஞ்ஞான ரீதியான ஆய்வினை மேற்கொண்டு அவர்களின் சரியான காலத்தை கண்டறிய முடியும் எனச் சுட்டிக் காட்டியுள்ளார்.

“மறுபுறம், இந்த சந்தர்ப்பத்தில் காணாமல் போனவர்களை அடையாளம் காண்பதற்காக பல சத்தியக் கடதாசிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என நீதிவான் தெரிவித்தார். எனவே, எதிர்காலத்தில் ஏதேனும் மரபணு பரிசோதனை செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுமாயின், தகுந்த மாதிரிகளைப் பெறுவதற்கான ஏற்பாடுகளையும் செய்துள்ளோம். மிகவும் முறையான மற்றும் விஞ்ஞான ரீதியில், அதாவது ஒவ்




வொரு எலும்புக்கூட்டிலிருந்தும், இப்போது இந்த மூன்றாவது கட்டத்தில் பெறப்படும் ஒவ்வொரு எலும்புக்கூட்டிலிருந்தும் மாதிரியைப் பெற திட்டமிட்டுள்ளோம்.” – என்றார் அவர்.

பாரிய புதைகுழியின் முதலாவது மற்றும் இரண்டாவது அகழ்வின்போது, பணிகளுக்கு சரியான முறைகள் பின்பற்றப் படாமையால், அவ்வாறான மாதிரிகளை பெற்றுக்கொள்ள முடியவில்லை எனப் பேராசிரியர் வன்னி ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

“கடந்த முறை, கனரக வாகனங்கள் மற்றும் கனரக இயந்திரங்கள் மூலம் ஏற்கனவே அகழ்வு மேற்கொள்ளப்பட்டமையால் நிறைய இடையூறுகள் ஏற்பட்டன. இதனால், முதல் கட்டத்திலும், இரண்டாம் கட்டத்திலும் அவற்றைச் செய்ய முடியாமல் போனது. எனவே அத்தகைய இடத்திலிருந்து இதுபோன்ற சோதனைக்கான மாதிரிகளை எடுப்பது ஆபத்தானது. ஆனால் இந்த முறை, எதிர்காலத்தில் எந்தவொரு அறிவியல் ஆய்வுக்கும் பயன்படுத்தக்கூடிய மாதிரிகளை எங்களால் சரியான முறையில் பெற முடிந்தது.”– என்று அவர் குறிப்பிட்டார்.

40 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்ட கொக்குத் தொடுவாய் மனித புதைகுழியில் எடுக்கப்பட்ட மனித எலும்புக் கூடுகளின் அளவு குறித்தும், விசாரணைகளுக்கு முன்னோடியாக இருக்கும் தடயவியல் தொல்பொருள் ஆய்வாளர் பேராசிரியர் ராஜ் சோமதேவ விளக்கமளித்துள்ளார்.

“இந்த மூன்றாவது சந்தர்ப்பத்தில், நான்கு மனித எலும்புக் கூடுகளை எங்களால் கண்டுபிடிக்க முடிந்துள்ளது.

தொடர்ச்சி▼



# வன்னி மனித புதை குழியின் எதிர்கால அகழ்வின்போது மரபணு பரிசோதனைக்காக மாதிரிகள் சேகரிக்கப்படும்

## கொக்குத்தொடுவாய் அகழ்வாய்வு குறித்துத் தகவல்

தொடர்ச்சி▲

மேலதிகமாக கடந்த இரண்டாம் கட்டத்தில் நாங்கள் இங்கே அகற்றாத மேலும் மூன்று மனித எலும்புக்கூடுகள் உள்ளன. இவற்றை பார்க்கும்போது, இப்போது ஏழு எலும்புக்கூடுகளை அகற்ற வேண்டியுள்ளது. நாங்கள் அகழ்வுப் பணிகளைத் தொடர்கிறோம். இந்த அகழ்வின் முடிவுகளுக்கு அமைய இந்த இடத்தில் மேலும் பல எலும்புக்கூடுகள் இருப்பதைப் புரிந்துகொள்ளக்கூடிய சான்றுகள் எங்களிடம் உள்ளன. ஆனால் இதன் எண்ணிக்கை எவ்வளவு என்று சொல்வது எங்களுக்கு இன்னும் கடினமாக உள்ளது. எலும்புக்கூடுகள் ஒன்றன் மேல் ஒன்றாக வைக்கப்படாமல் இருப்பதால், அகழ்வுப் பணிகள் முடியும் வரை சரியான தீர்மானத்திற்கு வருவது எங்களுக்கு கடினமாக உள்ளது.

எனவே, இந்த எலும்புக்கூடுகள் ஒன்றின் மேல் ஒன்றாக விழுந்துள்ளதால் அவற்றை அகற்றுவது மிகவும் சிக்கலானது என நான் நினைக்கிறேன், எனவே அவற்றை மிகவும் கவனமாக அகற்ற வேண்டும்.”

மனித எலும்புக்கூடுகளுக்கு மேலதிகமாக, வெகுஜன புதைகுழியில் கண்டறியப்பட்ட பகுப்பாய்வுக்கு பயன்படுத்தக் கூடிய பொருள்கள் குறித்தும் தடயவியல் தொல்பொருள் பேராசிரியர், விளக்கமளித்திருந்தார்.

“நாங்கள் இரண்டு முக்கியமான சில தொல் பொருள்களைக் கண்டுபிடித்துள்ளோம், அதாவது, பகுப்பாய்வுக்கு பொருத்தமான, பயன்படுத்தக்கூடிய இரண்டு பொருள்கள் கிடைத்துள்ளன. துப்பாக்கிச் சன்னத்தின் தலை, ஒரு புல்லட் ஹெட், மற்றொன்று இரண்டு கம்பி துண்டுகள் கிடைத்துள்ளன. எனவே நாம் அதை சுத்தம் செய்து பகுப்பாய்வு செய்ய வேண்டும். இன்று அந்த இரண்டும்தான் எங்களுக்கு கிடைத்தன.”

மீட்கப்பட்ட பொருள்களின் பகுப்பாய்வு தாமதமானதற்கான காரணத்தையும் அவர் தெளிவுபடுத்தினார்.

“அது தவிர, மட்பாண்ட துண்டுகள், உடைந்த கண்ணாடி போத்தல்கள் மற்றும் பிற இரும்புத் துண்டுகளையும் நாங்கள் கண்டறிந்துள்ளோம். மட்பாண்ட துண்டுகள், கண்ணாடித் துண்டுகள், பிற இரும்புத் துண்டுகளுக்கும், எலும்புக்கூடுகளுக்கும் இடையிலான தொடர்பு என்னவென எமக்குத் தெரியவில்லை. அகழ்வு முடியும் வரையில் இதுத் தொடர்பில் நாம் ஆராய வேண்டும். மேலும் கிடைக்கின்றவற்றை பார்த்து, அவர்களின் நிலைகள் மற்றும் அவைகள் எவ்வாறு இதனுடன் தொடர்புபடுகின்றன என்பது தொடர்பிலும், இறந்தவர்களுடன் அவைகளுக்கு நேரடியாக தொடர்பு காணப்படுகிறதா அல்லது அந்த சம்பவத்துடன் தொடர்புடையதா? இல்லையெனில், உடல்கள் வேறு இடத்தில் இருந்து குப்பையைப்போல் இங்கு கொண்டு செல்லப்பட்டனவா? என்பதை ஆய்வு செய்து தீர்மானிக்க சிறிது காலம் எடுக்க வேண்டும்.”

ஒரு வருடத்திற்கு முன்னர் வன்னியில் தற்செயலாக கண்டுபிடிக்கப்பட்ட வெகுஜன புதைகுழியின் காலக்கணிப்புக்கான கார்பன் பரிசோதனைக்கு தேவையான மாதிரிகளை சேகரிக்கும் உத்தரவு இதுவரை தமக்கு கிடைக்கவில்லை என அவர் கூறுகிறார். ஒரு வெளிநாட்டு ஆய்வகத்தில் சரியான காலத்தை தீர்மானிக்க, கார்பன் 14 அல்லது “பொம்ப் பள்ஸ்“ அல்லதுபகுப்பாய்வு செய்யப்பட வேண்டும் என்பது அவரது பரிந்துரை.

இந்த சம்பவம் நடந்த காலத்தை பரிந்துரைக்க நீதிமன்றம் எனக்கு உத்தரவிட்டுள்ளது.

அதனால் நான் அதை செய்துள்ளேன். ரிலேடிவ் டேட் (தொடர்புடைய காலப்பகுதி) நீதிமன்றத்தில் எவராவது கோரிக்கை வைத்தாலோ, விஞ்ஞான சோதனைக்கு அனுப்ப நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தாலோ, அகழும்போதே தெரிவிக்க வேண்டும். ஏனென்றால் நாம் அதில் மாதிரிகளை சேரிக்க வேண்டும். எனினும் அவ்வான ஒன்று இன்னும் வரவில்லை.”

கொக்குத்தொடுவாய் வெகுஜன புதைகுழியில் அகழ்வில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இதுவரை எவ்வித அழுத்தமும் விடுக்கப்படவில்லை என, வன்னியில் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்த பேராசிரியர், மகிழ்ச்சியாகவும் ஒத்துழைப்புடனும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் தெரிவித்தார்.

எல்லோரும் எங்களுடன் மிகவும் நட்பாக இருக்கிறார்கள். எங்களுக்கு இதுவரை அவ்வாறான அழுத்தம் அல்லது பாதிப்பும் எதுவும் இல்லை.”

2023 ஆம் ஆண்டு ஜ"ன் மாத இறுதியில், கொக்குத்தொடுவாய் மகாவித்தியாலயத்திலிருந்து கொக்கிளாய் நோக்கி சுமார் 200 மீற்றர் தொலைவில், நீர் வழங்கல் திணைக்கள ஊழியர்கள் நீர் குழாய்களை அமைப்பதற்காக நிலத்தை தோண்டிக் கொண்டிருந்த போது, மனித உடல் பாகங்கள் மற்றும் ஆடைத் துண்டுகள் வெளிப்பட்டன.





# கரடியனாறு காரைக்காடுப் பிரதேசதில் புதைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் மீட்பு

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள காரைக்காடு பிரதேசதில் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் 299 ஜொனி கண்ணிவெடிகள், ரி.56 ரக துப்பாக்கிக்கான 19 ஆயிரத்து 930 ரவைகள் , 38 பியூஸ் வெடிபொருள் துண்டுகள் உட்பட பெருமளவிலான ஆயதங்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை மீட்டுள்ளனர் என்ச் வாழச்சேனை கடதாசி ஆலை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பாளர் பொலிஸ் இன்ஸ்பெக்டர் கே.ஜி.லக்மல் குமார தெரிவித்தார்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி வருண ஜயசுந்தர ஆலோசனையின்படி அம்பாறை பிராந்திய கட்டளை அதிகாரி திரு.ஏ.எஸ்.பி.குணசிறி, மட்டுமாவட்ட விசேட அதிரடிப்படை பொறுப்பாளர் சம்பத் குமாரவின் வழிகாட்டலில் வாழைச்சேனை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் கே.ஜி.லக்மல் குமார, வவுணதீவு, கல்லடி, களவாஞ்சிக்குடி முகாம் கட்டளை அதிகாரிகள் தலைமையில் நீதிமன்ற உத்தரவை பெற்று இந்த அகழ்வுபணி இடம்பெற்றது.

இதில் மிகவும் பாதுகாப்பாக பொலிதீன் பைகளில் சுற்றப்பட்டு புதைத்து வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் 299 ஜொனி கண்ணிவெடிகள், 19,930 ரி.56 ரக துப்பாக்கி ரவைகள், 38 பியூஸ் வெடிபொருட்களை மீட்டனர். இதில் மீட்டகப்பட்ட ஆயுதங்களை நீதிமன்ற அனுமதியை பெற்று வெடிக்கவைத்து அழிப்பதற்கான நடவடிக்கையைமுன்னெடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த காலத்தில் இந்த பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசமாக இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.









# இந்திய மீனவர்களின் அத்துமீறலால் தாலியைக் கூட மீட்க முடியவில்லை!

## மீனவ சங்கப் பெண் கவலை

(எஸ்.நிதர்ஷன்)

மாதகல் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்தியா இழுவைமடித் தொழிலாளர்களால் ஏற்பட்ட இழப்பீட்டை நிவர்த்தி செய்வதற்கு எனது தாலியை அடகு வைத்தும் மீட்க முடியவில்லை என்று வலிகாமம் தென்மேற்கு கடற்றொழிலாளர் சமாசத்தின் பொருளாளர் பெனடிக் நிர்மலா தெரிவித்தார்.

மாதகல் பகுதியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்தியாவின் அத்துமீறிய இழுவைமடித் தொழிலாளர்களால் எமது மீனவர்கள் தொடர்ச்சியாகப் பல்வேறு இனங்களை அனுபவித்து வருகின்றனர்.

எமது மீனவர்களின் பல ஆயிரம் ரூபா பெறுமதியான வலைகள் தொடர்ச்சியாக அறுக்கப்பட்டு வருகின்ற நிலையில் ஒவ்வொரு மீனவனுக்கும் பல கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை இந்தியாவின் அத்துமீறிய இழுவைமடித் தொழிலாளர்கள் மூன்று படகுகளில் வருகை தந்த நிலையில் கடற்கரையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களினால் எமது இருபதுக்கு மேற்பட்ட மீனவர்களின் வலைகள் அறுத்து நாசம் செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கான இழப்பு வழங்குவது யார்?

ஒவ்வொரு மீனவனின் குடும்பமும் இந்திய ஆத்துமீறிய இழுவைப் படகுகளால் கோடி ரூபாக்களை இழந்த நிலையில் பலரின் நகைகள் வங்கிகளில் அடகு வைக்கப்பட்டுள்ளன.

எனது பிள்ளைகளின் மீன்பிடி வலைகளும் இந்திய அத்துமீறிய இழுவைப் படகுகளால் அறுக்கப்பட்டுள்ள நிலையில் புதிய வலைகளை வாங்குவதற்காக எனது தாலியை வங்கியில் அடகு வைத்தேன்.

மீண்டும் தொடர்ச்சியாக இந்திய இழுவைமடிப் படகுகளின் அத்துமீறலால் எனது பிள்ளைகளின் வலைகளும் அறுக்கப்பட்டு வரும் நிலையில் எனது வங்கியில் அடகு வைக்கப்பட்ட தாலியை மீட்க முடியாமல் உள்ளது.

ஆகவே, இந்திய அத்துமீறிய இழுவைப் படகுகளை நமது கடற்பரப்புக்குள் நுழைய விடாமல் கடற்படையினர் அவர்களைத் தொடர்ச்சியாகக் கைது செய்ய வேண்டும்."

– என்றார்.

# பருத்தித்துறை முன்னாள் நகர பிதா விபத்தில் சிக்கி பரிதாப உயிரிழப்பு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ், வடமராட்சி வடக்கு – பருத்தித்துறை நகர சபையின் முன்னாள் நகர பிதா வேலுப்பிள்ளை நவரத்தினராசா விபத்தில் சிக்கி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கடந்த 29ஆம் திகதி முல்லைத்தீவு நோக்கி மோட்டார் சைக்கிளில் அவர் பயணித்தபோது புளியம்பொக்கணைப் பகுதியில் வீதியில் பாதுகாப்பற்ற முறையில் அமைக்கப்பட்ட சிறு மேட்டில் (பம்மிங்) விபத்துக்குள்ளானார்.

இதன்போது படுகாயமடைந்த அவர், கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை 4 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் -12.7.2024




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நம்பிக்கை நிறைந்து காணப்படும் நாள். கடின உழைப்புக்கு வெற்றி கிடைக்கும் நாள். நீங்கள் எடுக்கும் முடிவுகள் நல்ல பலன்களை அளிக்கும்.

பணியிடத்தில் திருப்தியான சூழல் காணப்படும். கடினமான உழைப்பின் மூலம் நற்பெயரும் அதன் மூலம் நன்மதிப்பும் பெறுவீர்கள்.

உங்கள் குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள்.

இன்று நிதிநிலையில் அதிர்ஷ்டம் காணப்படும். உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். அதிர்ஷ்டம் காரணமாக நிதிநிலையில் முன்னேற்றம் காணப்படும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று முழுவதும் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்காது. நீங்கள் உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் கடைபிடிக்க வேண்டும். எது நடக்கிறதோ அதை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும். இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக அமைய இறை வழிபாடு மற்றும் பிரார்த்தனையை மேற்கொள்ளுங்கள்.

அதிகப்பணிகள் காரணமாக அதிருப்தி காணப்படும். உங்கள் மேலதிகாரிகளுடன் பிரச்சினைகளை சந்திப்பீர்கள். பணிகள் அதிகம் காணப்படுவதால் ஓய்வு கிடைப்பது அரிது.

உங்கள் மனதில் குழப்பமான உணர்வுகள் காணப்படும். இதன் காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

இன்று பணபுழக்கம் குறைந்து காணப்படும். நிதியைப் பொறுத்த முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்க வேண்டும். பணத்தை கையாளும் போது கவனம் தேவை.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.




இது உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. உங்கள் பணிகளை முன் கூட்டியே திட்டமிடுங்கள். இன்று நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். கூடுதல் பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். இதனால் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாத நிலை இருக்கும்.

உங்கள் துணையுடன் விவாதத்தில் ஈடுபடுவீர்கள். உங்கள் உணர்வுகளைக் கட்டுபடுத்த வேண்டும். அன்பை வளர்க்க வேண்டும்.

வீட்டின் புனரமைப்பு மற்றும் பராமரிப்புக்குப் பணம் செலவு செய்ய நேரும். பணத்தை கவனமாகக் கையாளவும்.

உங்கள் தாயின் உடல் நலத்துக்காகப் பணம் செலவு செய்ய நேரும்.




இன்று மந்தமான நிலையே காணப்படும். உங்கள் வளர்ச்சியை பாதிக்கும் தேவையற்ற உணர்வுகளுக்கு இடம் அளிக்காதீர்கள். அமைதியாக இருந்து எதையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் குழந்தைகளின் வளர்ச்சி குறித்த கவலை காணப்படும்.

உங்களிடம் காணப்படும் தன்னம்பிக்கை காரணமாக கடினமான பணிகயும் விரைவாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடாதீர்கள். உங்கள் பிரச்சனைகளை நட்புடன் பேசி தீர்த்துக் கொள்ளுங்கள்.

பொறுப்புகளும் பணத் தேவைகளும் அதிகமாகக் காணப்படும். அது உங்களை வருத்தாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். உற்சாகக் குறைவு காரணமாக தன்னம்பிக்கையும் ஆற்றலும் பாதிக்கப்படும்.




இன்று உங்களுக்கு ஆக்கப் பூர்வமான நாள், இன்று ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படுவீர்கள். இன்று எடுக்கும் புதிய முயற்சிகள் வெற்றியை அளிக்கும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் பொறுமையுடன் பணிகளைக் கையாள வேண்டும். உங்கள் சக பணியாளர்களிடம் பேசும் போது பொறுமை தேவை.

உங்கள் துணையிடம் நட்புணர்வுடன் நடந்து கொள்வீர்கள். இதனால் உறவின் சிறப்பை உங்கள் துணை உணர்ந்து கொள்ள இயலும்.

நிதிநிலை சிறப்பாக காணப்படும் நாள். உங்கள் தேவைகள் பூர்த்தியடையும். நீங்கள் அதிக பணம் சேமிப்பீர்கள்.

இன்று கால் வலி ஏற்படலாம். யோகா மேற்கொள்வது ஆறுதலைத் தரும்.




இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். முக்கியமான செயல்களை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப்போடவும். எந்த சூழ்நிலையிலும் நம்பிக்கை இழக்காதீர்கள்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். இன்று பணியில் மூழ்கி இருப்பீர்கள். முறையாக திட்டமிடுவதன் மூலம் சிறப்பாக பணியாற்றலாம்.

உங்கள் துணையுடன் பேசும் பொது அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருங்கள். இதன் மூலம் கண்டிப்பாக இருவரிடையே மகிழ்ச்சி நிலவும்.

பயணத்தின் போது பணத்தை கவனமாகக் கையாளவும். கையில் அதிக பணத்தை எடுத்துச் செல்ல வேண்டாம்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படுகின்றது.




இன்று சற்று மந்தமான நாளாக இருக்கும். சவால்கள் நிறைந்து காணப்படும் நாள் என்பதால் உங்கள் உணர்வுகளை கட்டுபடுத்த வேண்டும். மனக் குழப்பங்களை நீக்கி தெளிவாக இருக்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகளைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

உங்களின் நேர்மறையான உணர்வுகள் காரணமாக உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள். இதனால் உறவில் அமைதியும் திருப்தியும் நிலவும்.

அதிக பணம் சம்பாதிக்கும் வாய்ப்பும் கணிசமான தொகை சேர்க்கும் வாய்ப்பும் இன்று குறைவு. இன்று அதிர்ஷ்டமும் உங்களுக்கு சாதகமாக இல்லை.

வயிற்று வலியால் நீங்கள் பாதிக்கபடலாம். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தியானம் மற்றும் பிரார்த்தனை மேற்கொள்வது சிறந்த பலனைத் தரும்.




இன்று உங்கள் இலக்குகளில் வெற்றி கிடைக்கும் நாள். உங்களின் நேர்மையான முயற்சி மூலம் உங்களிடம் மறைந்திருக்கும் திறமைகளை நீங்கள் உணரும் நாள். இன்று முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

உங்கள் செயல் திறனில் உங்கள் திறமை வெளிப்படும். நீங்கள் தொடர்ந்து கடின முயற்சி செய்து உங்கள் திறமைகளை மேம்படுத்துவீர்கள்.

உங்கள் இருவரிடையே புரிந்துணர்வு குறைந்து காணப்படும். இதனால் உறவில் திருப்தியான நிலை இருக்காது.

இன்று பணபுழக்கம் அதிகமாக காணப்படும். இந்தப் பணத்தை ஆடம்பரப் பொருள்கள் வாங்கப் பயன்படுத்தலாம்.

உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப்படும். எனவே உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 12.07.2024




இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்காது. நீங்கள் உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் கடைபிடிக்க வேண்டும். எது நடக்கிறதோ அதை அப்பயே எற்றுக் கொள்ள வேண்டும். இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக அமைய இறை வழிபாடு மற்றும் பிரார்த்தனையை மேற்கொள்ளுங்கள்.

அதிகப் பணிகள் காரணமாக அதிருப்தி காணப்படும். உங்கள் மேலதிகாரிகளுடன் பிரச்சினைகளை சந்திப்பீர்கள். பணிகள் அதிகம் காணப்படுவதால் ஒய்வு கிடைப்பது அரிது.

உங்கள் மனதில் குழப்பமான உணர்வுகள் காணப்படும். இதன் காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

இன்று பணபுழக்கம் குறைந்து காணப்படும். நிதியைப் பொறுத்த முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்க வேண்டும். பணத்தை கையாளும் போது கவனம் தேவை.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.




இன்று வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் சாதகமான நாள்.குறைந்த முயற்சியில் அதிக வெற்றி பெறுவீர்கள். இன்று நம்பிக்கை உணர்வுடன் இருப்பீர்கள். இதனால் நன்மை ஏற்படும்.

இன்று முக்கிய சந்திப்புகளில் கலந்து கொள்வதில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் கருத்துக்களை தெளிவாக எடுத்துச் சொல்வீர்கள். இது உங்கள் சகபணியாளர்களுக்கு ஆச்சரியம் அளிக்கும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொள்வீர்கள். இது அவரை மகிழ்விக்கும். எனவே பொதுவாக இருவரிடமும் மகிழ்ச்சி காணப்படும்.

இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

நீங்கள் ஸ்திரமான ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். தேக ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்கும்.




உங்களின் சமயோசித புத்தி மற்றும் புத்திசாலித்தனம் காரணமாக இன்று பயனுள்ள பலன்கள் சாத்தியம். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

இன்று நீங்கள் சிறப்பாக செயலாற்றுவீர்கள். உங்கள் செயல் திறன் அசர வைக்கும். உங்கள் முயற்சிக்கு மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். குடும்ப பிரச்சினைகளை கலந்தாலோசித்து சுமூகமான தீர்வு காணுவீர்கள்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்வீர்கள். பூர்வீகசொத்து மூலம் பணவரவு வர வாய்ப்புள்ளது.

உங்கள் நேர்மறை எண்ணம் மற்றும் மன உறுதி காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று இனிமையான நாள். உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்கும் நாள். உங்கள் செயல்களை எளிதாக முடிப்பீர்கள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் அதிர்ஷ்டமான நாள்.

உங்கள் செயல்திறனுக்கு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். உங்கள் பணிகளை சிறந்த தரத்துடன் முடித்து தருவீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு தக்க வைத்துக் கொள்ள முடியும்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு உயரும். நீங்கள் இன்று புதிய முதலீடுகளை செய்யலாம். அது லாபகரமாக இருக்கும்.

உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் மன உறுதி காரணமாக இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




